1968 பிப்ரவரி 14] [திரு. என். சங்கரய்யா]

மற்றபடி தேர்தலில் தங்கள் சுயேச்சையான திட்டப்படி எங்கள் கட்சி போட்டியிட்டது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதுபோல—நான் சொன்ன சொற்கள் சுருக் கெழுத்தில் இருக்கும்—என்னுடைய அறிவிப்பில், 'எதிர்க் கட்சி' என்ற சொல்லையே நான் பயன்படுத்தவில்லை. 'அந்த, அந்தக் கட்சி' என்று சொன்னேன். அலுவல் ஆய்வுக் குழுவில் செய்த முடிவுக்குத் தக்கவாறு, எதிர்க் கட்சித் தலைவருக்கும் மாண்புமிகு முதல் அமைச்சருக்கும் ஒதுக்கும் நேரத்தைத் தவிர, மற்ற கட்சி களுக்கெல்லாம், அவரவர்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு, நேரத்தை ஒதுக்கி, மேலும் 50 சதவிகிதம் அதிகமாகக் கொடுப்பது என்பது முடிவு. அதன்படி நான் இன்றைக்கு எடுத்துக் கொள்ளும் நேரம் பற்றிக் குறிப்பிடுகையில், அதைக் குறிப்பிட்டு, தேவைப்பட்டால் ஏதாவது மேற்கொண்டு பேசத் தேவை யிருந்தால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டச் சொன்னால் கூட்டுகிறேன். அங்கே இறுதியாக முடிவு செய்ய முடியும். இங்கே அலுவல்களைக் கவனிக்க இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

5. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1967-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விவசாய வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையை * சபைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை பேரவைக்கு அளிக் கப்பட்டுள்ளது.

4. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே நான் அறிவித்தபடி இன்றைய விவாதத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, விவாதத்தைத் தொடரு கிறேன். உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் தொடர்ந்து அவர்களுடைய உரையை ஆற்றுவார்கள்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் என்னுடைய உரை இடையிலே நிறுத்த வேண்டிய நேரம் வந்ததால் நிறுத்தப்பட்டது. தன்னுடைய உரையிலே, மாண்பு மிகு கவர்னர் பெருமான் அவர்கள், விவசாயத்திற்கு இன்றைய அரசாங்கம் என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறது என்பதைத்

* 1968 பிப்ரவரி 14-ம் தேதியிட்ட அரசிதழ் (தனிவெளியீட்டில்) வெளியிடப்பட்டுள்ளது.